
ICAR | PMMSY | सत्यमेव जयते | NFDB | सी एम एफ आर आइ CMFRI

# கடல்பாசி வளர்ப்பு முறைகள்





## மூங்கில் மிதவை முறை

( அமைதியான, ஆழம் குறைந்த மற்றும் தாவர உண்ணி மீன்கள் குறைவாக உள்ள கடல் பகுதிக்கு ஏற்றது )

- 12 அடி X 12 அடி அளவிலான சதுர வடிவிலான மூங்கில் மிதவையில், 20கயிறுகள் (3.5 mm) கட்டப்படுகிறது.
- 150 கிராம் அளவிலான விதைப்பாசிகள், ஒரு கயிற்றில் 20 இடங்களில் 15 செ. மீ இடைவெளியில் கட்டப்படுகிறது.
- ஒரு மிதவையில் மொத்தம் 60 கிலோ அளவிலான விதைப்பாசிகள் கட்டப்படுகிறது - பயிரிட்ட பின் அறுவடை செய்ய 45நாட்கள் வரை தேவைப்படுகிறது
- ஒரு மூங்கில் மிதவையில் தோராயமாக 260 கிலோ விளைச்சல் கிடைக்கிறது. இதில் அடுத்த பயிருக்கு 60 கிலோ போக 200 கிலோ ஈர பாசி உலர்த்தப்பட்டு 20 கிலோ (10%) விற்பனைக்கு தயாராகிறது.
- ஒரு வருடத்திற்க்கு, 4 முதல் 5 முறை ஒரு மூங்கில் மிதவையில் இருந்து 100 கிலோ உலர்ந்த பாசி அறுவடை செய்ய முடியும்.
- ஐந்து சுழற்சிகளுக்கும் சேர்த்து, ஒரு மூங்கில் மிதவையில் இருந்து தோராயமாக 5000 வரை மொத்த வருமானம் கிடைக்கும். ( ஒரு கிலோ உலர்ந்த பாசி ரூ 50/-)
- ஒரு குடும்பம் 30 மூங்கில் மிதவைகளைக் கொண்டு வளர்ப்பில் ஈடுபடும் போது,

| | | |
|---|---|---|
| மொத்த செலவு | (30 x 2000) | = 60,000 |
| வருமானம் | (30xரூ. 5000) | = 1,50,000 |
| நிகர லாபம் | | = 90,000 |







## மோனோலைன் முறை

( மிதமான அலை மற்றும் ஆழம் குறைந்த கடல் பகுதிக்கு ஏற்றது )

- 10 அடி நீளமுள்ள சவுக்கு கம்புகள், 20 அடி X 120 அடி அளவிலான செவ்வக வடிவில், 10 அடி இடைவெளியில் ஊன்றப்படுகிறது. அதில் 6.5 மீட்டர் அளவுள்ள 100கயிறுகள் கட்டப்படுகிறது.
- 150 கிராம் எடையுள்ள விதைப்பாசிகள்,6.5 மீட்டர் அளவுள்ள கயிற்றில் 40 இடங்களில் 15 செ. மீ இடைவெளியில் கட்டப்படுகிறது.
- 10 மோனோலைன் கயிறுகள் சேர்ந்தது, ஒரு மூங்கில் மிதவைக்கு சமமானதாகும் - பயிரிட்ட பின் அறுவடை செய்ய 45 நாட்கள் தேவைப்படுகிறது
- 10 மோனோலைன் கயிற்றில் தோராயமாக 260 கிலோ விளைச்சல் கிடைக்கிறது. இதில் அடுத்த பயிருக்கு 60 கிலோ போக 200 கிலோ ஈர பாசி உலர்த்தப்பட்டு 20 கிலோ (10%) விற்பனைக்கு தயாராகிறது.
- ஒரு வருடத்திற்க்கு, 4 முதல் 5 முறை 10 மோனோலைன் கயிற்றில் இருந்து 100 கிலோ உலர்ந்த பாசி அறுவடை செய்ய முடியும்.
- ஐந்து சுழற்சிகளுக்கும் சேர்த்து, 10 மோனோலைன் கயிற்றில் இருந்து தோராயமாக 5000 வரை மொத்த வருமானம் கிடைக்கும்.(ஒரு கிலோ உலர்ந்த பாசி ரூ 50/-)
- ஒரு குடும்பம் 300 மோனோலைன் கயிறுகளை (30 மூங்கில் மிதவைக்கு சமம்) கொண்டு வளர்ப்பில் ஈடுபடும் போது,

| | | |
|---|---|---|
| மொத்த செலவு | (30 x 2000) | = 60,000 |
| வருமானம் | (30xரூ. 5000) | = 1,50,000 |
| நிகர லாபம் | | = 90,000 |






## ட்யூப் நெட் முறை

(அதிக அலைகள் கொண்ட கடல் பகுதிக்கு ஏற்றது.)

- 1.5 செ. மீ கண்ணி அளவுடைய வலையானது, 10செ. மீ விட்டம் மற்றும் 25 மீட்டர் நீளத்தில் சுற்றப்படுகிறது. இதற்க்கு உள்ளே விதைப்பாசியானது வைக்கப்படுகிறது.
- ஒரு ட்யூப் நெட்டில் மொத்தம் 15 கிலோகிராம் அளவிலான விதைப்பாசிகள் வைக்கப்படுகிறது.
- நான்கு ட்யூப் நெட்கள் சேர்ந்தது, ஒரு மூங்கில் மிதவைக்கு சமமானதாகும் - பயிரிட்ட பின் அறுவடை செய்ய 45 நாட்கள் வரை தேவைப்படுகிறது
- நான்கு ட்யூப் நெட்களில் தோராயமாக 260 கிலோ விளைச்சல் கிடைக்கிறது. இதில் அடுத்த பயிருக்கு 60 கிலோ போக 200 கிலோ ஈர பாசி உலர்த்தப்பட்டு 20 கிலோ (10%) விற்பனைக்கு தயாராகிறது.
- ஒரு வருடத்திற்க்கு, 4 முதல் 5 முறை நான்கு ட்யூப் நெட்டில் இருந்து 100 கிலோ உலர்ந்த பாசி அறுவடை செய்ய முடியும்.
- ஐந்து சுழற்சிகளுக்கும் சேர்த்து, நான்கு ட்யூப் நெட்களில் இருந்து தோராயமாக 5,000 வரை மொத்த வருமானம் கிடைக்கும்.(ஒரு கிலோ உலர்ந்த பாசி ரூ 50/-)
- ஒரு குடும்பம் 120 ட்யூப் நெட்களை (30 மூங்கில் மிதவைக்கு சமம்) கொண்டு வளர்ப்பில் ஈடுபடும் போது

| | | |
|---|---|---|
| மொத்த செலவு | (30 x 2500) | = 75,000 |
| வருமானம் | (30xரூ. 5000) | = 1,50,000 |
| நிகர லாபம் | | = 75,000 |



# பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டு திட்டம் (PMMSY)- கடல்பாசி வளர்ப்பு


- கடல்பாசி வளர்ப்பானது, கடலோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது.
- கடல்பாசியிலிருந்து பிரித்தெடுக்கப்படும் அகார் (*Agar*), அல்ஜின் (*Algin*) மற்றும் காரஜீனன் (*Carragennan*) என்கிற ஜெல்லி போன்ற பொருளானது உணவு, மருத்துவம் போன்ற 200 வகையான உற்பத்திதொழிலுக்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறது.
- பெரும்பாலும் இந்தியாவில் *Kappaphycus alvarezii* (கப்பா பாசி) மட்டும் வளர்க்கப்படுகிறது.
- நாட்டு ரக பாசிகளான *Gelidiella acerosa* (மரிக்கொழுந்து பாசி), *Ulva lactuca* (அல்வா பாசி), *Gracilaria spp.* (கஞ்சி பாசி,வேர் பாசி) போன்றவைகளுக்கும் வளர்க்கும் தொழில்நுட்பங்கள் உள்ளன.



*Gelidiella acerosa* (மரிக்கொழுந்து பாசி),



*Ulva lactuca* (அல்வா பாசி),



*Gracilaria spp.* (கஞ்சி பாசி,வேர் பாசி)

## PMMSY-ல் பயனாளிகள் சார்ந்த திட்டங்கள்

| வ.எண் | துணை-திட்டங்கள் | அலகு | அலகு செலவு (ரூ.) | அரசு உதவி (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| | | | | பொது / ஆண்கள் (40%) | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / பெண்கள் (60%) |
| 1. | கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் நிறுவுதல் உள்ளீடுகள் உள்பட (1 மிதவை) | 1 | 1500 | 600 | 900 |
| 2. | கடற்பாசி வளர்ப்பு மோனோலைன்/டியூப் நெட் முறையில் நிறுவுதல் (ஒரு அலகு என்பது 25 மீ நீளமுள்ள 15 கயிறுகள்) உள்ளீடுகள் உட்பட | 1 | 8000 | 3200 | 4800 |



- அரசின் நிதி உதவியானது ஒரு நபருக்கு 15 மிதவைகள் (அல்லது) ஒரு குழு/சங்கத்திற்க்கு 500 மிதவைகளுக்கு மிகாமல் இருக்கும்.
- அரசின் நிதி உதவியானது, மோனோலைன் அல்லது ட்யூப் நெட் முறையில், ஒரு குழுவிற்க்கு கப்பா பாசி வளர்ப்பில் 100 அலகுகள் மற்றும் கிராஸில்லேரியா வகை பாசியில் ஒரு குழுவிற்க்கு 300 அலகுகளாக இருக்கும்.
- திட்டம் சார்ந்த நிதியுதவி விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட தமிழ்நாடு மீன்வளத்துறை அலுவலகத்தை அணுகவும்.
- திட்டம் சார்ந்த தொழில்நுட்ப விபரங்களுக்கு மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையம், மண்டபம் அலுவலகத்தை அணுகவும்.

தயாரிப்பு : B. ஜான்சன் | R. ஜெயக்குமார் | G. தமிழ்மணி | M. சக்திவேல் | P. ரமேஷ்குமார் | K.K. அனிக்குட்டன் | M. சங்கர் | A.K. அப்துல் நாசர்

வடிவமைப்பு : C. சாமுவேல் | K. முகேஷ்

வெளியீடு : இயக்குனர், இ.வே.ஆ.க. மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், கொச்சி, கேரளா

CMFRI Pamphlet No. 96/2021